# மீனாட்சியம்மை சதகம்



பதிப்பாளர்

மா. லெமூரியா

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

2010

சுவடியியலும் பதிப்பியலும் என்னும்

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்படும் பதிவேடு

எண்: 53010909

**முனைவர் வீ.அரசு**

துறைத் தலைவர்

தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

மெரினா வளாகம்

சென்னை-600 005

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் **"சுவடியியலும் பதிப்பியலும்"** என்னும் பட்டயப்பேற்றிற்காக **"மீனாட்சியம்மை சதகம்"** என்னும் தலைப்பிலான ஓலைச்சுடியை **மா. ஜெமூரியா** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும், இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

நாள்:

இடம்: சென்னை-5

**வீ.அரசு**

**மா. ஜெஹூரியா**

ஆய்வாளர்

சுவடியியல் மற்றும் பதிப்பியல்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை-600 005.

# பதிப்பாளர் உறுதிமொழி

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப்பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் '**மீனாட்சியம்மை சதகம்**' என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதி அளிக்கின்றேன்.

பதிப்பாளர்

நாள்:

இடம்: சென்னை-5

**மா. ஜெஹூரியா**

# நன்றியுரை

"சுவடியியலும் பதிப்பியலும்" என்ற பட்டயப் படிப்பினைப் பயில வாய்ப்பளித்ததோடு அத்துறை சார்ந்த ஆழ்ந்த அறிவினை நல்கிய தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் **பேராசிரியர் வீ.அரசு** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியில் எழுதப்பட்ட எழுத்துகளை அசை,சீர்,விருத்தம்,யாப்பு என்று வகைப்படுத்தி சுவடியைப் பிழையின்றி எவ்வாறு பிரித்தல் வேண்டும் என்று யாப்பிலக்கணப் பாடம் நடத்திய **பேராசிரியர் ய.மணிகண்டன்** அவர்களுக்கும் என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியில் காணப்படும் எழுத்து முறைகளையும்,அதனைப் படியெடுத்து எழுதுவதற்கும் சீர்பிரித்து எழுதுவதற்கும் பயிற்சி அளித்த ஆசிரியர் இளங்கோ, லதா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சுவடியைப் பதிப்பிப்பதற்காக சுவடி அளித்து உதவிய சென்னைப் பல்கலைக்கழக கீழ்த்திசைச்சுவடி நூலகத்தின் காப்பாட்சியர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நிலைகளில் என் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து என்னை வழிநடத்தி வரும் முனைவர் **சா. சரவணன்,** விரிவுரையாளர், தமிழ்த்துறை விவேகானந்தா கல்லூரி அவர்களுக்கும் தோழருக்கும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பட்டய வகுப்பு படிப்பதற்கு உறுதுணையாக எல்லா வகையிலும் ஆக்கமும் ஊக்கமும் உதவியும் அளித்த என் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர்களுக்கும் என் உளமார்ந்த அன்பு கனிந்த நன்றி.

மேலும் தோழர்கள் செ. ஆனந்தி, இந்திராகாந்தி, தேவராஜ் அவர்களுக்கும் நன்றி.

இப்பதிப்பு நூல் நல்லதொரு வடிவம் கொண்டிட உரிய வகையில் அரிதின் முயன்று நூலாக்கம் செய்து கொடுத்த என் தோழர்கள் சுபாஷ், தீபிகா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

# உள்ளடக்கம்

பக்கம்

1. சதகம் அறிமுகம் 1

2. பதிப்பு முறை 13

4. மீனாட்சியம்மை சதகம் 17

பின்னிணைப்புகள்

1. சதக இலக்கியங்களின் பட்டியல் 69

2. செய்யுள் முதற்குறிப்பு அகராதி 71

துணைநூற்பட்டியல்

# சதகம் அறிமுகம்

## சிற்றிலக்கிய வகை மற்றும் சதகம்

தமிழ்மொழியில் சங்க இலக்கியம் தொடங்கி தற்போது வரை பல்வேறு வகை இலக்கியங்கள் தோன்றி தமிழ் மொழியையும் தமிழ்ச் சமூகத்தையும் செம்மைப் படுத்தியுள்ளன. இவ்வாறு தோன்றிய இலக்கியங்களைச் சங்க காலம், காப்பிய காலம், பக்தி காலம், சிற்றிலக்கிய காலம் என்று ஒரு தொடர்ச்சியில் கூற இயலும். இவ்வரிசையில் சிற்றிலக்கியங்கள் நிறைய தோன்ற ஆரம்பித்த காலமாக 11–ம் நூற்றாண்டின் பிற்பகுதி கூறலாம். அதற்கு முன்னரே தமிழில் சிற்றிலக்கியங்கள் தோன்றிவிட்டன என்று கூறப்பட்டாலும் சிற்றிலக்கியங்கள் அதன் பின்னரே பெருவாரியாகத் தோன்றின.

சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும் என்ற கருத்து தமிழ்ச்சமூகத்தில் அனைவராலும் வழிமொழியப்பட்டு வந்துள்ளது. சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை பற்றிய அக்கருத்து சதுரகராதியில் இருந்து பெறப்பட்டது. சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறும் பல்வேறு நூல்கள் பல்வேறு எண்ணிக்கையில் சிற்றிலக்கியங்களை வகைப்படுத்துகின்றன. கீழ்க்கண்ட கூற்று அதை நன்கு விளக்கும்.

"தமிழ் மரபில் சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறு எனும் கருத்து நிலைபெற்று விட்டது. ஆயினும் அது எப்போதும் அவ்வெண்ணிக்கையில் இருந்ததில்லை சான்றாகப் பின்வரும் பாட்டியல் நூல்கள் சுட்டும் சிற்றிலக்கிய எண்ணிக்கைகளை நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| பன்னிரு பாட்டியல் | – | 65 |
| வெண்பாப் பாட்டியல் | – | 54 |
| சிதம்பரப் பாட்டியல் | – | 63 |
| இலக்கண விளக்கம் | – | 77 |
| பிரபந்த தீபிகை | – | 80 |
| தொன்னூல் விளக்கம் | – | 89 |
| சதுரகராதி | – | 96 |

இப்பாட்டியல் நூல்களின்படி சிற்றிலக்கிய எண்ணிக்கை ஒருமுகப்படவில்லை என்பதை அறிய முடியும். தற்காலத்துக் கணக்கின்படி சிற்றிலக்கிய வகை 417 என உறுதி செய்யப்பட்டுள்ளது" (இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள், சிலம்பு நா. செல்வராசு)

எனவே சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை 417 வகைப்படும் என்று அறியலாம். அவ்வாறு தோன்றிய 417 சிற்றிலக்கிய வகைகளில் சதகமும் ஒன்றாகும்.

சதகம் என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். சதம் என்ற அடிச்சொல்லிலிருந்து இச்சொல் தோன்றியது. 'சதம்' என்றால் வடமொழியில் நூறு என்று பொருள்படும்.

வடமொழியில் சொற்களுக்கு இடையில் 'க' என்னும் ஓர் எழுத்துக் கூடிவருவதை 'க'ப்பிரத்தியம் என்று வடமொழியாளர்கள் கூறுவர். அவ்வகையில் 'சதம்' என்ற சொல் இடையில் 'க'ப்பிரத்தியம் பெற்று சதகம் என்ற சொல் உருவானது எனலாம். 'சதகம்' என்ற சொல்லுக்கு 'நூறு கொண்டது' என்பது பொருளாகும். நூறு எண் கொண்டதைச் சதகம் என்று வழங்குதலால், நூறு பாடல்கள் கொண்டு அமையும் இலக்கியத்தையும் சதகம் என்ற வடமொழிப் பெயராலேயே அழைத்தனர். (சதக இலக்கியம் ந.வீ.செயராமன் – தமிழில் சதக இலக்கியம்)

## தமிழில் சதக இலக்கிய தோற்றமும் வளர்ச்சியும்

சங்க காலம் தொடங்கி கி.பி.9–ம் நூற்றாண்டு வரைத் தோன்றிய எந்த ஒரு இலக்கிய, இலக்கண நூல்களிலும் சதகம் என்னும் சொல் இடம் பெறவில்லை. கி.பி.9–ம் நூற்றாண்டில் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவாசகத்தில்தான் முதன் முதலாகச் சதகம் என்னும் சொல் காணப்படுகின்றது. அம்மானை, தெள்ளேனம், சாழல், பூவல்லி என்று பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கொண்டு இறைவனைப் போற்றிப் பாடியது போலவே சதகம் என்னும் இலக்கிய வகையில் முதன் முதலாகச் திருச்சதகம் என்னும் பெயரில் நூறு பாடல்களைக் கொண்டு பாடியுள்ளார். வடமொழியின் சதக இலக்கிய வகையிலிருந்து நூறு என்ற பாடல் எண்ணிக்கையை மட்டும் எடுத்துக் கொண்டு அந்தாதித் தொடையில் திருச்சதகத்தைப் படைக்கின்றார் மாணிக்கவாசகர். இது 'சதகம்' என்ற வகையில் தனி ஒரு நூலாக எழுதப்படாமல் இறைவனைப் போற்றுதல் என்ற

ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டு திருவாசகத்துட னேயே இணைத்துள்ளார் மாணிக்கவாசகர்.

திருச்சதகம், சதகம் என்ற பெயரை கொண்டதாக அமைந்த போதிலும் சதக இலக்கியங்களின் அமைப்பை உடையது அல்ல. இதைக் கீழ்கண்ட நான்கு விளக்கங்கள் மூலம் அறியலாம்.

1. திருச்சதகத்தில் உள்ள நூறு பாடல்கள் பத்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சதக இலக்கியங்களில் அத்தகைய பிரிவுகள் காணப்படவில்லை.

2. திருச்சதகத்தில் உள்ள ஒவ்வொரு பத்துப் பாடல்களும் ஒரே யாப்பில் பாடப்படாது வெவ்வேறு யாப்பில் பாடப்பட்டுள்ளன. சதக இலக்கியங்களில் நூறு பாடல்களும் ஒரே யாப்பில் பாடப்பட்டுள்ளன.

3. திருச்சதகத்தில் 'மெய்தான் விரும்பி' என்று முதற்பாடல் தொடங்கி 'மெய்யர் மெய்யனே' என்று நூறாவது பாடல் முடிக்கப்பட்டிருப்பதால் திருச்சதகம் அந்தாதி அமைப்புடையதாக இருக்கின்றது. சதகப் பாடல்கள் அந்தாதி அமைப்பைக் கொண்டவை அல்ல.

4. திருச்சதகம் தனி ஒரு நூலாகப் பாடப்படாமல் திருவாசகத்தில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. சதக நூல்கள் அனைத்தும் தனித்தனி நூல்களாகப் பாடப்படவில்லை.

மாணிக்கவாசகரின் திருச்சதகத்திற்குப் பிற சதக இலக்கியங்களுக்கும் பெயர், எண் ஆகிய இரண்டில் மட்டும் ஒற்றுமை உள்ளதே தவிர பிற அமைப்புகளில் ஒற்றுமை இல்லை. (தமிழில் சதக இலக்கியங்கள், ப. பழனியம்மாள்)

தனி ஒரு நூலாகத் தோன்றிய முதல் சதக இலக்கியம் அவிநாசி ஆறைகிழார் என்னும் புலவர் இயற்றிய கார் மண்டலச் சதகம் ஆகும். இவரின் காலம் கி.பி.1025–70 என்று கார்மண்டலச் சதகத்தை பதிப்பித்த உரையாசிரியர் திரு.ப.அ.முத்துத் தாண்டவராயப்பிள்ளை என்பவரின் கூற்றாக ந.வீ.செயராமன் தனது சதக இலக்கியங்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

## தொடக்க காலச் சதகங்களின் பாடுபொருள்

அவிநாசி ஆறைகிழார் எனும் புலவர் இயற்றிய கார்மண்டலச் சதகம், கார்மண்டலத்தில் வாழ்ந்த வேளாளர் பெருமை, ஆட்சி செய்த அரசர்கள், புலவர்கள், வள்ளல்கள், ஞானியர் ஆகியோர் வரலாறுகளை விரிவாகக் கூறுகின்றது (சதகத் திரட்டு, த. இராசேசுவரி).

மேற்கண்ட பொருளை ஒட்டியே, தொடக்க காலங்களில் தோன்றிய சதக இலக்கியங்கள் மண்டல வரலாறுகளைப் பாடும் வண்ணமே அமைந்தன. கார்மண்டலச் சதகத்தை அடியொற்றித் தோன்றிய சோழ மண்டலச் சதகம், ஈழ மண்டலச் சதகம், தொண்டை மண்டலச் சதகம், மிழலைச் சதகம், பாண்டி மண்டலச் சதகம் போன்ற சதகங்கள் ஒரு பகுதியின் வரலாற்றையும், அங்கு வாழ்ந்த

சிறப்பு வாய்ந்த பெரியோர்களின் வரலாற்றையும் வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தன.

## சதக இலக்கியங்களின் வகைகள்

சதக இலக்கியங்கள் தொடக்கத்தில் மண்டல வரலாறுகளைப் பாடும் வண்ணம் அமைந்த போதிலும் காலப்போக்கில் அவற்றின் பாடுபொருட்கள் மாற ஆரம்பித்தன. சதக இலக்கியங்களை அவற்றின் பாடுபொருட்களைக் கொண்டு கீழ்கண்டவாறு வகைப்படுத்துவர்

1. மண்டலச் சதகங்கள்
2. நீதிச் சதகங்கள்
3. காப்பியச் சதகங்கள்
4. துதிச் சதகங்கள்
5. பதிகச் சதகங்கள்

(சதகத்திரட்டு, த. இராசேசுவரி)

## மண்டலச் சதகங்கள்

முதலில் தோன்றிய சதக இலக்கியம் மண்டலச் சதகமே ஆகும். மண்டலச் சதகங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த மக்கள் மன்னர்கள், புலவர்கள், வள்ளல்கள் மற்றும் அடியார்கள் ஆகியோர்களின் வரலாற்றையும் சிறப்பினையும் எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. முதலில் தோன்றிய கார்மண்டலச் சதகத்தினை ஒட்டியே அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட தொண்டை மண்டலச் சதகம், சோழ மண்டல சதகம் மிழலைச்

சதகம், ஈழமண்டலச் சதகம், நந்த மண்டலச் சதகம், பாண்டிமண்டலச் சதகம், கொங்கு மண்டலச் சதகம் போன்றவைகளின் பாடுபொருட்கள் அமைந்தன.

மண்டலச் சதகங்களை அவைகளின் பாடுபொருட்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. வரலாறு பாடும் சதகங்கள்,
2. வரலாறும் தெய்வப் பெருமையும் பாடும் சதகங்கள் (தமிழில் சதக இலக்கியங்கள், பழனியம்மாள்)

வரலாறு பாடும் மண்டலச் சதகங்கள் பொதுவாக வேளாளர்களின் சிறப்பையும், அவர்களின் பெருமையையும் எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்தன எனலாம்.

## நீதிச் சதகங்கள்

தொடக்கத்தில் பாடப்பெற்ற சதகங்கள் ஒரு பகுதியின் வரலாற்றை எடுத்துரைக்கும் வண்ணமே அமைந்தன. இது வெகுகாலத்திற்கு தொடர்ந்தது. மக்களுக்கு நீதியை எடுத்துரைக்கும் முகமாகத் தோன்றிய முதல் சதக இலக்கியம் 17–ம் நூற்றாண்டில் தோன்றிய தண்டலையார் சதகமே ஆகும். அதனை இயற்றியவர் படிக்காசுப் புலவர் என்பவர் ஆவார். தண்டலையார் சதகத்தைத் தொடர்ந்து, குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம், விநாயகர் சதகம், சுமதீ சதகம், அறப்பளீசுர சதகம், அண்ணாமலைச்சதகம், திருவேங்கட சதகம், மனுநீதிச் சதகம், கோவிந்த சதகம், ஜெயங்கொண்டார் சதகம்,

வீரராகவ சதகம், இரகூல் சதகம், பர்த்ருஹரி சதகம் போன்ற நீதிச் சதகங்கள் தோன்றின. நீதிச் சதகங்களை

1. பாட்டுடைத்தலைவனை உடைய நீதிச் சதகங்கள்
2. பாட்டுடைத்தலைவன் இன்றி அமைந்துள்ள நீதிச் சதகங்கள்

என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

## துதிச் சதகங்கள்

17–நூற்றாண்டில் தண்டலையார் சதகம் தொடங்கி நீதிச் சதகங்கள் நிறைய வெளிவர ஆரம்பித்தன. இவைகளில் நீதிக் கருத்துக்களே இடம் பெற்றன. குமரேச சதகம், கைலாசநாதர் சதகம், விநாயகர் சதகம், அண்ணாமலைச் சதகம், திருவேங்கட சதகம் என்று இறைவனின் பெயர் கெண்டு அமைந்த நீதிச் சதகங்கள், பெயரில் இறைவனைக் கொண்டிருந்தாலும் அவைகள் நீதிக் கருத்துக்களையே முதன்மையாகக் கொண்டிருந்தன. 18–ம் நூற்றாண்டில்தான் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டும், அதைத் தொடர்ந்து 19–ம் நூற்றாண்டில் சமயச் சார்புடைய அடியார்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டும் துதிச் சதகங்கள் தோன்றின. (பழனியம்மாள்)

நடராசச் சதகம், அருணாசலச் சதகம், இராமலிங்க சதகம், தில்லை நடராய சதகம், மழவை சிங்காரச் சதகம், சிவகுருச் சதகம், சொக்கலிங்க கடவுள் தோத்திரச் சதகம், உமையாம்பிகை சதகம், கோமதியாம்பிகைச் சதகம், தில்லை சிவகாமசுந்தரி சதகம், தில்லை கற்பக விநாயகர் சதகம்,

முதல்வர் திருச்சதகம் போன்ற வைச சமயத் துதிச் சதகங்களும் எம்பிரான் சதகம் மற்றும் வடவேங்கட நாராயண சதகம் போன்ற வைணவ சமய துதிச் சதகங்களும், முகயித்தீன் சதகம், மதீனாமாநகர் துதிச் சதகம் போன்ற இசுலாம் சமய துதிச் சதகங்களும் 18–19 –நூற்றாண்டின் பல்வேறு காலகட்டங்களில் இயற்றப்பட்டன.

## காப்பியச் சதகங்கள்

சங்க காலத்திற்குப் பின் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்கள் எழுதப்பட்டன. தமிழில் கதை கூறும் முறையில் அமைந்த பேரிலக்கியங்கள் என்று இவைகளைக் கொள்ளலாம். காப்பியத்தின் கூறுகளைக் கொண்டு கதையை சுருங்கிய வடிவில் தருவதாக 100 பாடல்களால் இயற்றப்பட்ட சதகங்கள் காப்பியச் சதகங்களாகும்.

இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கீழ்கண்ட இருநூல்கள் அவைகளுக்கு உதாரணங்களாகத் திகழ்கின்றன.

1. ஸ்ரீமந்நடராஜஙந்தித மகாபாரத சதகம் – கிருஷ்ணமூர்த்தி அய்யர்
2. திருத்தொண்டர் சதகம் – மலைக்கொழுந்து நாவலர்.

## பதிகச் சதகங்கள்

இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களின் சிறப்பு, பெருமை இவைகளைப் பகரும் வகையில் அமைந்த நூல்களைப் பதிகச் சதகங்கள் எனக் கொள்ளலாம். என். கனகராச ஐயர் இயற்றிய காசி விசுவநாத சதகம் பதிகச் சதகமாக விளங்குகிறது. ஆசிரியர் சிவபெருமானை முன்னிலைப்படுத்திக் காசியில் தொடங்கிச் சமய வேறுபாடின்றிச் சைவ, வைணவ, சமணத் திருத்தலங்களைப் பாடிப் போற்றியிருக்கின்றார்.

## சதக இலக்கணம்

சதகம் என்பது நூறு பாடல்களால் பாடப்படுவது என்ற கருத்தை தொடக்கத்திலேயே கண்டோம். மாணிக்கவாசகரால் முதன் முறையாக பயன்படுத்தப்பட்ட இவ்விலக்கிய வடிவமானது தமிழ் இலக்கண நூல்களில் அதன் முன்பு வரை வரையறை செய்யப்படவில்லை. பின்னர் கார்மண்டல சதகம் தொடங்கி, பல சதகங்கள் இயற்றப்பட்ட பின்னரே பாட்டியல் நூல்கள் இதற்கு இலக்கணம் கூற முனைந்தன.

பாட்டியல் நூல்களுள் காலத்தாற் பிந்திய, வைத்திய நாத தேசிகர் என்பவரால் கி.பி 17 ம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கம் என்ற நூலிலேயே சதகத்திற்கான முதல் விளக்கம் கிடைப்பதைக் காண்கிறோம். அப்பாட்டியல் நூல்.

**"விழையும் ஒரு பொருள் மேலொரு நூறு**
**தழைய உரைத்தல் சதகம் என்ப"**

(இவி 847)

என சதகத்திற்கு இலக்கணம் வரையாறுக்கின்றார்.

"சதக இலக்கியங்களின் பாடல் எண்ணிக்கையை மட்டும் சுட்டும் இப்பாடியல் நூல் பாடற்பொருள், யாப்பு ஆகியவற்றில் வரையரை ஏதும் செய்யவில்லை. எனவே எப்பொருள் பற்றியும் எவ்விதயாப்பிலும் நூறு பாடல்களால் பாடப்பெறுவது சதகம் என்பதே இலக்கண விளக்கப் பாட்டியலாரின் கணிப்பு எனக் கொள்ளலாம். மேலும் பாடல் தலைவர் குறித்தும் இப்பாட்டியலில் கருத்தேகம் காணப் பெறாமையால் வரையறை ஏதுமின்றி எவர் மீதும் இவ்விலக்கியம் பாடற்பெறும் என்பதும் உணர்தற்பாலதாம்.

முத்து வீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் இலக்கண விளக்கத்தின் கருத்தினைத் தழுவியே சதக வகையின் இலக்கணத்தை உரைத்துள்ளன; என்றாலும் சதக இலக்கியத்தின் இலக்கணம் இப்பாட்டியல் நூல்களில் மேலும் சிறிது தெளிவு படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

**"அகப்பொருள் ளொன்றன்மே லாதல் புறப்பொருள்**
**ஒன்றன்மே லாதல் கற்பித் தொரு நூறு**
**செய்யு ளுரைப்பது சதகமா மென்ப"**

(மு. வீ. 1117)

**"விரவகப் பொருளொன் நன்மேலாத லாதலுடன்**
**மேற்புறப் பொருள்க ளொன்றன்**
**மேலாதல் கற்பித்து நூறுசெயு ளாகவே**
**வின்வதே சதகமென்ப"** ( பி. தீபி:26)

**"சதகம் என்பதுவே சதச் செய்யுளாலே**
**அகப்பொருள் புறப்பொருள் இரண்டில் ஒன்று**
**அறைதலே"** ( பி. தீபி: 81)

(சிற்றிலக்கிய ஆராய்ச்சி, டாக்டர் இரா. கண்ணன்)

மேற்கண்ட கூற்றின் படியே சதகங்களின் பாடுபொருட்கள் பலவிதங்களை கொண்டுள்ளதையும், பாட்டுடை தலைவர்கள் இன்றியும்கொண்டும் காணப்படுகின்றன. சதக இலக்கியங்கள் மண்டலம், பதிகம், துதி, நீதி, காப்பியம் என்னும் பல்வேறு பாடுபொருட்களை கொண்டிருப்பதும், தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் முதலியன பாட்டுடைத் தலைவனைக் பெற்றுக் காணப்படுவதும், மண்டல சதகங்கள் பாட்டுடைத் தலைவன் அல்லாமல் ஒரு இடத்தின் வரலாற்றை உரைப்பதும் மேற்கண்ட கூற்றுக்கு வலுச்சேர்க்கின்றன.

சதக இலக்கியங்களை நோக்கும் பொழுது அவைகள் ஒரே யாப்பில் பாடப்படாமல், ஒவ்வொரு சதகமும் வெவ்வேறு யாப்பில் பாடப்பட்டு இருப்பதைக் காணலாம். நூறு பாடல்களும் ஒரே யாப்பில் பாடப்பட்டு இருப்பதையும் காணலாம்.

பொதுவாக சதக இலக்கியங்கள் கீழ்கண்ட நான்கு பொதுவான அமைப்புகளைக் காணப்படுகின்றன எனலாம்.

1. நூறு பாடல்களால் பாடப்பட்டு இருப்பது

2. புலவர், தம் விருப்பத்திற்கேற்ப மண்டலத்தைப் பற்றியோ, நீதியைப்பற்றியோ, இறைவனைத் துதித்தோ, காப்பியச் சுவை கொண்டோ பாடியிருப்பது.

3. பாடல்களில் ஒரே விதமான யாப்பு பயின்று வருவது.

4. ஒவ்வொரு பாடலின் ஈற்றடியும் மகுடம் பெற்று முடிவது.

(சதகத் திரட்டு , முனைவர். த. இராசேசுவரி)

# பதிப்பு முறை (மீனாட்சியம்மை சதகம்)

## ஆசிரியர் குறிப்பு

சுவடியின் முதலில் "மகாவித்துவானாகிய ஹரி ஓம் ஸ்ரீ திரிசிரபும் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை" என்று ஆசிரியர் பெயர் பற்றிய குறிப்பு உள்ளது. திரிசிரபுரம் என்பது திருச்சிராப்பள்ளியின் வேறு பெயராகும். இவர் உ.வே. சா வினுடைய ஆசிரியர் ஆவார். இவருடைய உ.வே.சா. அவர்கள் விரிவாக நூலாக எழுதியுள்ளார்.

## சுவடியின் அமைப்பும் அதில் பாடல்கள் எழுதப்பட்டுள்ள முறையும்

சுவடி நீண்டு காணப்படுகிறது. சுவடியின் இருப்பக்கமும் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன. இரண்ட துளையிடப்பட்டு கையிற்றால் கட்டப்பட்டுள்ளது. ஹரி ஓம் என்று ஆரம்பித்து மீனாட்சியம்மையை வணங்கியும், பின் ஆசிரியர் பிறந்த ஊர்பற்றிய குறிப்பும் எழுதப்பட்டுள்ளது. பாடல்களுக்கு தமிழில் எண்ணிக்கை இடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. சுவடிகள் சில

செல்லறித்து சிதிலமடைந்த நிலையில் காணப்படுகின்றன. சில இடங்களில் பாடல்கள் அடித்து அடித்து எழுதப்பட்டுள்ளன. சிதிலமடைந்த சுவடிகளும் முடிந்த அளவு பதிக்கப்பட்டுள்ளன.

## மகுடம் - பாடல் ஈற்றடி

சதகத்தின் முதல் பத்துப் பாடல்கள்,

"சேக்கிழார் கோத்தரன் வெள்ளோடையான்
திகழுமுத்துக் குமரவேள்
செல்வன் முத்துப்பழனி மால்பணியும் அன்னையே
தேவிமீனாக்ஷி யுமையே"

என்று மகுடம் பெற்று முடிந்துள்ளது. அதன் பின் மற்ற அனைத்துப் பாடல்களும் ,

" சனியாசியவர்கள் பெருமை", "புருஷர் பெருமை", "கொடிய தீ கோபமென்பார்", போன்று என்ற தலைப்பின் கீழ் பாடல் பாடப்பெற்றுள்ளதோ அத்தலைப்புகளே இறுதியில் மகுடமாகப் பெற்று இச்சதகம் அமைந்துள்ளது.

## பாடுபொருள்

மீனாட்சியம்மை மேல் பாடப்பட்டுள்ள இம்மீனாட்சி யம்மை சதகம் அரசர் சிறப்பு, வணிகர் சிறப்பு, அந்தணர்சிறப்பு, வேளாளர் சிறப்பு என ஒவ்வொரு நிலையினரும் எவ்வாறு வாழ்தல் வேண்டும் என்று பொதுவாக கூறிப் பின் ஒவ்வொரு தனி மனிதனும் எவ்வாறு வாழ வேண்டும் என்று அறிவுறுத்தல் முறையிலும், வாழ்வில் செய்யக் கூடாதன எவை என்றும் அதற்கான காரணத்தையும் செய்யவேண்டியன எவை என்று கூறி ஒரு நீதி நூலாக இச்சதகம் திகழ்கின்றது.

## யாப்பு

முதல் பாடல் நேரிசை வெண்பாவிலும், பின் நான்கு பாடல்கள் தரவு கொச்சகக் கலிப்பாவினாலும் பாடப் பெற்றுள்ளது. பாடல்கள் ஆசிரிய விருத்தத்தில் பாடப்பட்டுள்ளன.

## பாடல்களுக்கு எண் இடப்பட்டுள்ள முறை

சுவடியில் தமிழ் எண்கள் இடப்பட்டுள்ளன. பதிப்பில் ஆங்கில எண் இடப்பட்டு பதிக்கப்பட்டுள்ளது.

## பிறமொழிக்கலப்பு

மீனாக்ஷி, கிருபை, க்ஷேவரம், குஷ்டம், ரோஹம், துஷ்புத்திரர், சத்புத்திரர், வானப்பிரஸ்தர் போன்ற பல வடமொழி சொற்களும் சேட்டன் என்ற மலையாளச் மொழிச் சொல்லும் காணப்படுகின்றன.

## பாடல்கள் அச்சுசெய்த முறை

செய்யுளை சீர் பிரிக்காத அடிகள் மட்டும் பிரிக்கப்பட்டுள்ளன. சுவடியில் இருப்பது போலவே அச்சு செய்யப்பட்டுள்ளது. தெரிந்த அளவில் பிழைகள் களையப் பட்டுள்ளன. செய்யுளின் முதற் குறிப்பு அகரவரிசையில் பின்னிணைப்பாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

## சதக இலக்கியங்களின் பட்டியல்

இதுவரை வெளிவந்துள்ள சதக இலக்கியங்களின் பட்டியல், சிற்றிலயக்கிய ஆராய்ச்சி என்னும் நூலில்லிருந்து இரா. கண்ணன் அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து எடுத்துப் பின்னிணைப்பாக தரப்பட்டுள்ளது.

# மீனாட்சியம்மை சதகம்

# மீனாட்சியம்மை சதகம்

ஸ்ரீ – பஹரி
சுந்தரர்பாற் கூடிவளர்தோகை மீனாம்பிகை மேல்
செந்தமிழாலே சதகஞ் செப்பவே–வந்தருளும்
அஞ்சக் கரனும் அமுதரடி தொழுகுமைந்து
கஞ்கற்பகம்பார் (நேரிசை வெண்பா)

## ஹரி : ஓம்:

## தரவு கொச்சகக்கலிப்பா

பூமணக்கும் பொழின்மணக்கும் பொழிற்கெழில் கூர்தருமுகமாயத்
தூமணக்கு மொருபொருளைத்துறைப் புனல்பாய வளத்ததுவாய்
நாமணக்கும் புகழ்படைத்து நல்மணக்கும் புல்மணக்குந்
தேமணக்குந் தமிழ்மணக்குந் தென்பாண்டித்திருநாட்டில். 1

மருந்துநிகர்மொழிமடவார் மைந்தரொடுமாட்டயரப்
பொருந்துவளம் பலசெறியும் பூஞ்சோலை புடையுடைந்தாய்ப்
பருந்துதிசான் றென்றுமொளிர் பாவநாசப் பதிப்பால்
திருந்துபுகழ் விக்கிரமசிங்சகபுர மெனும்பதியில். 2

பொன்பூத்த பெருஞ்சிகரப் பொதியவரை நிதியமெனுங்
கொன்பூத்த மெடியகுணக் குறியமுனி யருள்புலமை
முன்பூத்த வேதலைமுறைவாய்ந்தமுழுதலத்து
மின்பூத்த ....ப் பாண்டி வேளாள குலதிலகர் 3

அணிதருமம் பலக்கூத்த ரவர்பனையார் வடமுனும்
பணிதருகற் புடையநலம் பரவுமயி லம்மையார்
துணிதருமற் றிவர்தம்பாற் நுலறிவங் குறித்தென்னத்
திணிதருமெய் திருந்தொருவர் திருவருளா லவதரித்தார். 4

## ஹரிஓம்

பாராதிபுவனங்களி.. றதுமதில்நின்று

பயிலுயிர்க்குயிரானதும்

பலசமயமென்றேயமென்றேய்வமென்பதும்

பழமறையின்முடிநின்றதும்

பேரானகதிரொளிக்கொளியாயிருப்பதும்

பெரிதிலும்பெரிதானதும்

பிரமன்முதலாயினோர்தொழில்செய்துதொழுதிடப்

பெருங்கிருபையருள்செய்ததும்

ஓராறிடத்தினில்உற்றிடுஞ்சத்தியு

முள்ளபடிநீயாதலால்

உனையலாற்பிறதெய்வமுண்டென்பரெந்தநு

லோதினாரோவறிகிலேன்

சீர்மேவுசேக்கிழார்கோத்தரன்வெள்ளோடையான்

றிகழுமுத்துக்குமரவேள்

செல்வன்முத்துப்பழனிமால்பணியும்அன்னையே

தேவிமீனாக்ஷியுமையே 1

## அந்தணர்சிறப்பு

வெடியவேநீராடிசெங்கையிலாக்கியம்

வெங்கதிர்க்குவந்தளிப்பார்

வேதாகமங்களைக்கற்றதின்படியொழுகி

மேலானஞானமடைவார்

முடிவாகவேள்வியைச்செய்வார்கள்காலமொரு
மூன்றையுந்தானறிகுவார்
முனியாதுபிதரர்களைமகிழ்விப்பர்சாதியில்
மூத்தவர்பொய்மையில்லார்

கடிதலில்லாதவுயிர்செபதபம்பண்ணுவார்
காசினித்தேவராவார்
காயத்திரி யாற்சகல வினைகளும் போக்குவார்
கருது மறையாளர் கண்டாய்

செடியிலாச்சேக்கிழார்கோத்தரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
செல்வன் முத்துப்பழனி மால்பணியும் அன்னையே
தேவிமீனாக்ஷி யுமையே 2

## அரசர் சிறப்பு

மனுநீதிபிறழாதுசெங்கோலின்மும்மாரி
மாதமும்பெய்துவிப்பார்
மகிழ்வோடுகுடிகளிடமாறிலொருகூறாக
வரிதன்னயேகொள்ளுவார்

மனமீதிலூக்கமும்பொறுமையும்இன்சொலும்
மன்னுயிர்கள்கார்க்குமதுவும்
மந்திராலோசனையும்தந்திரவுபாயமும்
மானமும்பொருகீர்த்தியும்

வினைமேவுபகைவென்தீங்கினியர்செய்யினும்
விதிவழித்தண்டிப்பதும்
வேள்விகொடையோதலாம்முத்தொழிலையேற்பதும்
வேந்தர்தம்பெருமைகண்டாய்

சினமிலாச்சேக்கிழார்கோத்தரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
செல்வன்முத்துப்பழனிமால்பணியும்அன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 3

## வணிகர் சிறப்பு

அளவில்பணமுற்றாலும்வரைவினிற்கதிகமாய்
அணுளவுசெலவுசெய்யார்
அலைகடலிலோடியும்பொன்தேடுவார்பருவம்
அதின்மிகப்பொருள்கொடுப்பார்

கொளுமுதற்கேதேனும்லாபமதுநோக்கியே
கொண்டபண்டங்கள்விற்பார்
குற்மிகுபொய்யுளோர்தந்தாலுங்
கோடிமுறிகொள்ளார்கள்காசுமீய்யார்

வளர்மலைகளசையினுமரையாதசொன்னிலையர்
வார்த்தைமிதமாயுரைப்பார்
மன்னுதருமந்தனைக்கைவிடாச்
சௌபாக்கியவணிகர்தம்பெருமைகண்டாய்

தெளிவானசேக்கிழார்கோத்தரன்
வெள்ளோடையான்திகழுமுத்துக்குமரவேள்
சேயன்முத்துப்பழனிமால்பணியும்அன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 4

## வேளாளர் சிறப்பு

பலதடவைநிலமுழுதுபருவநற்பயிர்செய்து
பாங்காகவிளைவெடுத்து

பண்ணுதவமுனிவோர்கள்தேவர்களும்அரசர்தம்
படைகளோடுமனிதர்யாரும்

வறுமையுறுமிருகபக்ஷியாதியுணவுண்ண
வூண்மாறாதளிக்குமதும்
மறையாளர்செய்கின்றசதகருமமும்வேந்தர்
மனுநீதிமார்க்கமதுவும்

விலகாதுவணிகர்க்குவர்த்தகமும்லாபமும்
மேதினிச்சகலவளமும்
மேலானதருமங்கள்செய்வதும்வேளாள
மேழியின்பெருமையன்றோ

சேக்கிழார்கோத்தரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
சேயன்முத்துப்பழனிமால்பணியும்அன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 5

## பிர்மசாரி பெருமை

கண்ணாடிசந்தனம்பூவோடுவெற்றிலை
காணுமிவைதீண்டாமலே
காலையிலுமாலையிலும்நீராடியக்கினிக்
காரியந்தான்முடித்து

தண்மையுறுமுஞ்சியிடையிற்பூண்டுபூணுநூலில்
தன்னினமானுரிதொடுத்து
தளராதுபிக்ஷையேற்றுண்டுதுயில்வரினிரவில்
தரைமீதுறங்கிடுவதும்

பண்ணுறுநால்வேதசாஸ்த்ராத்தியானம்
பண்ணியேபரமகுருவின்
பக்திகொடுஅவர்தம்மைநித்தமும்
பணிவதும்பகர்பிரமசாரிபெருமை

தண்மையுறுசேக்கிழார்கோத்தரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
சேயன்முத்துப்பழனிமால்பணியும்அன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 6

## இல்வாழ்வான் பெருமை

கற்றநுற்றுறைபோயிநற்குணம்நிறைந்திடும்
கற்புடையமனைவியோடு
கருதுனம்மொன்றாகிஅருளன்புபொங்கிடக்
கனிவுமிகுவார்த்தைசொல்லி

உற்றிடுவிருந்துக்குமாதவர்க்குமினிய
வூணுதவியுபசரித்து
உயர்வானஐந்துவிதவேள்விநிதமுஞ்செய்து
ஓங்குநல்லறமியற்றி

எற்றனிக்கீர்த்திக்கொடுபிறர்மனையைநயவாது
வேற்றமிகுநத்ததிக்காயிட்டநாளிற்
றனதுபெண்டிரொடுபுணர்வதும்
இல்லறப்பெருமையென்ப

சேக்கிழார்பகோத்தரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
சேயன்முத்துப்பழனிமால்பணியுமன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 7.

## வானப்பிரஸ்தர் பெருமை

இல்லறமுடித்தமேலறிவுநூலோதியே
வேற்றமிகுஞானமெய்தி
இந்திரி யநிகரகந்தவநிலமைசத்தியம்
இணையில்பேரொழுக்கமுடனே

நல்லமையுமெவ்வுயிரிடத்திலுங்கருணையது
நண்ணமாந்தோலுடுத்தி
நடைமெதுவும்உடல்மெலிவும்ஆகியேதுன்புரின்
நலியாதுகாடுமலையில்

சொல்லரியசருகுஜலபக்ஷணஞ்செய்ளுதுபனி
சொரியுநாள்நீரகத்தும்
சுடுவேனிலைய....முனிடைதவம்புரிவதுஞ்
சுகவானபிரஸ்தர்பெருமை

செல்லைநிகர்சேக்கிழார்கோத்திரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
சேயன்முத்துப்பழனிமால்பணியுமன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 8

## சனியாசி பெருமை

காவிதோய்வஸ்திரம்புனைந்துசிகைபூணூல்
கடிந்துநற்பாதகுறடுங்
காலிலிட்டேநெடியதண்டுங்கமண்டலங்
கைகளிற்கொண்டுகருமம்..

யாவையுமொழித்துமேற்....மேற்கொண்டுமே
யக்கினியக்கினிபசிதனக்கே
யாகாரமதுபிக்ஷையேற்றுண்டுவரிநாராயண
வென்றரும்மொழிந்து

தாவிரவுபகலுமொரூரினிற்றுங்தரது
சதுர்மறைப்பொருள்......ர்ந்துறுஞ்
சகலபற்றுக்களுங்கைவிட்டுநிற்பதே
சனியாசியவர்கள்பெருமை 9

## மனையாட்டிபெருமை

கணவனுக்கயலானதெய்வமும்இலையென்று
கருதியேபள்ளிநீத்து
கண்விழித்துப்பொழுதுதொழுதெழும்பக்தியும்
காணுமவன்வாய்ச்சொல்லிலே

அணுவளவுபிசகாதநிலைமையுமுண்டிமுதல
ாதியி...பூசிப்பதும்
அறிவுடன்கற்பினதுவலிமையும்பொறுமையும
திமதுரமானமொழியும்

மணவாளன்வரவினுக்குட்செலவுசெய்வதும்
மனுசவாழ்க்கைக்குவேண்டு
பொருள்சேகரித்திடுவதுமனவியின்
பெருமையென்பதினைமேவு

சேக்கிழார்கோத்தரன்வெள்ளோடையான்
திகழுமுத்துக்குமரவேள்
சேயன்முத்துபழனிமால்பணியும்அன்னையே
தேவிமீனாக்ஷியுமையே 10

## கணவர் பெருமை

ஓதுபலதருமங்கள்செய்தவர்க்கனுகூல
முற்றிடுந்துணைவியென்றும்
உயர்வாகநமதுகுலமபிவிர்த்தியாக்கவரு
முசிதமாஞ்செல்வமென்றுந்

தீ தறவிளக்கிடுமனைவிளக்கென்றுந்
தேகமுட்பாதிரயென்றும்
சீ தமொழியினிமையால்மனதுறுங்குறையெலாந்
தீர்க்குநல்லமுதமென்றும்

பூதலம்புகழ்பொன்னினுடையாபரணங்கள்
பூட்டி.......சந்தோஷமாய்
க்....துமின்பக்கலவிசெய்தும்மனையாட்டாளைப்
போற்றுவதுபுருஷர்பெருமை 11

## தீமனைவி பெருமை

அடியென்றுகணவன்போர்செய்துவாதாடு
மஞ்சாததீயகுணமு
மதிதிவாய்வருவபவர்க்கன்னமிடுவென்றுசொலி
னட்டிசொலித்திட்டுகுணமுஞ்

சடியாதுதன்மனைப்பொருள்திருடிவிற்கின்ற
தையலார்க்கொடியகுணமுந்
தருசுவைச்சமயலைச்செய்துதலைவற்குமுன்
தானுண்டுமகிழுகுணமுந்

தடையறப்பிறர்மனைலெப்போதுநிற்பது
சரசபரியாசமுடனே
தருண்பரபுருஷரொடுவிளையாடுகுணமுமுள
ளதைய்யலேதீமனைவிகாண் 12

## தீப்புருஷரியல்பு

வெடுவெடுத்தெப்பொழுதுகோவித்து
மெயல்ப்பவேலைக்கெலாமுதைத்தும்
வெள்ளாட்டிப்போற்பாடுபட்டாலுமனைவி
மேல்வென்னெஞ்சிறக்கமற்றும்

நடுக்குற்றினியசமயலைச்செயினுண்டு
நன்கறகொக்கரித்தும்
நண்ணுமனை வாழ்க்கைக்கு வேண்டு பொருள் சொல்வரிஞன்
ஞாயமறியாதடித்துநா

துடிதுடித்திடதினுவிரவுதனிமனையிருத்திமேரு
தொகையைபாற்போயடுத்தும்
சோத்துக்குமேயமுகவைத்துதெனுந்துன்புசெய்
துஷ்ட்டரேத்தீக்கணவர்காண் 13

## சத்புத்திரனியல்பு

தன்னையிவ்வுலகினிற்தந்திடுந்தெய்வமுந்
தாய்தந்தையென்றெண்ணியே
சலியாதெனுபூசைசெய்தவர்கள்வேண்டுபொருட்
க்ஷணந்தானுதவியுந்

தன்னிகரிலாமலேதீக்ஷணபுத்திகொடு
திசதுர்மறைப்பொருடெரிந்து
சகலசாசூங்கனின்வல்லனென்று
சொல்சற்குணவிவேகமாயும்
சொன்னிலையுந்தருமமுமாசாரமேன்மையுந்
தோகைபங்காளர்கமலத்
துணையடியையெப்பொழுதுநெஞ்சமுட்ளகொண்டுவளர்
சுமுகரேசத்புத்திரர்காண். 14

## துஷ்டபுத்தரியல்பு

அன்னையோடுதந்தையைவைவது
வர்பசிக்கன்னமதுபோடாமலும்
ஆனதன்வயிறார்வுண்டு
வந்தவரெதிரேயங்கையைக்கழுவுமதுவும்

மன்னுசதுர்மறையாதிசற்குணங்கள்ளோதாமல்
மதமொடுசோம்பரேற்றும்
வருகாலைமாலைபகல்துயில்வதுஞ்சூதாடி
மகூஷபிடிச்சண்டைசெய்தும்

சொன்னிலமைதவறியுங்கள்ளமேலிட்டுமே
துரோகமொடுநாளுமயலார்
தோகையரிடத்திலேயிச்சைகொண்டே
திரியுந்துகூஷ்டரேதுகூஷ்புத்தராம் 15

## பெண்கள் கெ டுதற்கு யேதுவுரைத்தல்

தகுதியில்லா வார்த்தை பேசலும் பெருமையாய்
தலைக் கடையிலே நிற்றலுஞ்
சாற்று பலகனி வாயினுட்டலையை நீட்டலுந்
தடையறப் பகல் தூங்கலு

மகமனைக் காரியஞ் செய்யாமலும்
வெளியிலாஞ்ஞுயில்லா தேகலும்
தகுதியறு சொற் சொலி பழகுதல்
தலை வாயிறன்னிலேவந்து நிற்றல்
சற்று மஞ்சாமலே பலரோடு பேசுதல்
தானே சிரித்திடுதல் மிகவு பகலிலே தூங்குதல்
வே யைப்போலவே பார்த்திட 16

## தமயன்தம்பியரியல்பு

தந்தையையுந்தாயையுமொப்பென்றுத்தவர்களிவரென்று
தமயனோடுமவன்மனைவியின்
தாளினைகள்தன்னையேநேசமுடனே
தொழுதுதணிவிருமன்புகொண்டு

சந்ததமுமவர் சொன்னசொற்கடவார் துசெயுஞ்

சன்மார்க்கனே தம்பியாம்

தாரணிபுகழ்ந்திடத்தம்பியைப்பிள்ளைபோற்

றுனிமையோடுபார்த்துமேல்

சந்ததியோடேச்செல்வமவனடையவாகி

சொலித்தண்மையொடுவரவனைத்து

தக்கவிருவர்க்குமுயர் ஒன்றென்றுவொப்பிடு

தன்மையுடையோன்றமயனாம். 16

## தமையன்தம்பியரியல்பு

பொதுவாகியுள்ள பிதிராச்சிதச்சொத்தினைப்

புதைத்துமேயுள்ளடக்கிப்

போசனவகைக்காகவீ டின்மேலாயிரம்

பொன்கடன்கொண்டதன்றிப்

பதமாகவுந்தன்கலியாணமதுசெய்யதப்

பண்ணினென்சிலபூமியைப்

பையலேயென்றுதன்தம்பியைச்சதிசெய்யும்

பாவியேதீத்தமயனாம்

பதராமலண்ணனிடமனைவியைச்சேர்த்துமேற்

பலமோசமதுபுரிந்து

பாராத்தவர்களிகழவேமூத்தவன்மேற்

பழிகள்பகருவோன்தீ த்தம்பியாம்

பக்ஷமறவன்பொருள்த்திருடியேவிற்கின்ற

பாவியேத்தீத்தம்பியாம். 17

## சத்புருஷனியல்பு

எப்போதுமெவரிடத்தீதமுரைத்தும்
நியாயமெனிலோர்மிசையாமலும்
இப்பிறவிகிடையாது
யென்றெண்ணிநல்வழியிலிணையிலாப்

பொருள்தேடியேசெப்புபலத்தருமங்கள்செய்தின்புகொண்டுக்கலை
தேர்ந்துமெஞ்ஞானமெய்திச்
சிரத்தையொடுவீ டடையவூக்கெமொடுநிற்பதுஞ்
சிவனைமறாவதுன்னியும்

ஒப்புறவேயொழுகலுமெய்மைதவராதுபர
வுபகாரமதுசெய்வதும்
உலகெலாமி.......னாசத்துணைவிவேக
முற்றவனேசத்புருஷனாம். 18

## துஷ்ப்புருஷரியல்பு

சவைநின்றுமேவழக்கோர்சொல்வதும்
தானிஷ்டமாயிருந்து
சங்கதியறிந்துபோயெதிரிபால்மொழிகின்ற
சண்டாளஹிதவஞ்மும்

அவமாகவொருவர்க்குவொருவர்மேற்பகைவிளைத்த
கதிபோரைமூட்டுமதுவும்
அஞ்சாதேத்தனிவழித்துணையாவேனென்றுட
னடுத்துவெகுசதிசெய்வதும்

தவறானகோட்சொல்லிகுடிகெடுத்திடுவதுச்
சூமித்துரோகமதுவும்
தக்கவாண்பெண்ணைப்பிரிப்பதுவுமான
தீத்தன்மையோர்துஷ்புருஷராம் 19

## உத்தமியியல்பு

பாலியந்த ன்னிற் பி.... வினிட வாருள்வே .... யின்
படி நடந் தடங்கிடுவதும்
பாணிக் கிரஹணஞ் செய்திடு பேர்களேப்
பரதெய்வ மென்றெண்ணியே

நூலினெறி வழுதூது மாங்கலியமது பெருகு
நோம்மை பெம் மெலியற்றி
நுவல் மாமன் மாமி யைத்தந்தை தாய் போலவே
நோகாது வந்து போற்றிச்

சால வின்பற் தருமெல்வனமுழுவதுந்
தலை வஞ்க்குளேயடங்கி
தருமவார்த்தி கந்த விறப் பிள்ளைக்குள்ளாகியுந்
தானிருப்பாளுத்தமி. 20

## மத்திமீயியல்பு

சிறியபருவத்திலேபெற்றோக்கடங்காது
செய்வேலைதெரியாமலுந்
தினையளவுமொழியைமலையளவுசெய்து
ஒருவர்க்கொருவர்தீங்குதனைமூட்டிடுவதும்

உறுமின்பயௌவனத்துள்ளடங்கிப்புருஷ
னுரைகேட்டுநடவாமலே

உத்தராம்ஒருகோடிவித்தாரமததனை
யோங்கியேபேசிடுவதும்

தருகணியாய்வார்த்திகந்தன்னிலேமக்களுளாதள்ளியே
மருமக்களைச்சண்டை
செய்தோட்டிடும்வண்டப்பிசாசெனுந்
தன்மையுடையாள்மத்திமி 21

## சத்வகுணவியல்பு

ஆக்கலுடதுரவூணுண்டிடச்செய்வது
மாரந்துவொளிவெண்கலைகளை
அணிவிப்பதுந்திவதேவதாபத்தியி
லானபலதருமங்களில்

நேசமதுதருவதுஞ்செய்கருமபலனிலே
நிஷ்காமமழையீயவதும்
நிலையாகசாதுசங்கத்திலேசேர்ப்பதும்
நிகரிலாசமதமாத

தேசுபெறவேயுதவிவஸ்துநிச்சயமதைத்
தெரிவிக்கவறிவுந்துந்
தீர்க்கமாமோஷநெறிகாட்டியின்பருள்வதுஞ்
சிறந்திடுஞ்சத்வகுணமும். 22

## ரசோகுணவியல்பு

தன்னா........ட்டதகாரியம்முடித்திட
தானெண்ணியேமுயல் வதுந்
தருமங்கள்செயநினையுவேளைதனிலே.......
தன்னேசடுத்திடவது

மென்னகாரியமேனுந்தொடுவ
மோயவமோவிடுமோ
வென்றுசஞ்சலங்கொள்வது

மிஷ்ட்டகாமியங்களைப்பெற்றிடவுமேகரும
மேவளவோசெய்திடுவதும்
மின்னாபோகமுந்தனதானியம்மடுமை
மிகு............யெவையுமேம்மேலுமெடையவேமஷ்
யெச்சைவருவதும்மேவிளைரசோகுணமென்பர்காண் 23

## தாமதகுணவியல்பு

தக்கதிதுவென்றுந்தகாதிதுவென்றுமே
தானாயளதுஅறியாமலுஞ்
சத்கருமந்துஷ்க்கருமேலுமிரண்டதனிலுந்
தன்னகம்வெறுத்திடுவதுந்

சோளிடுமயக்கமுமயக்கமுந்தூக்கமும்
பெருகவேசூழ்ந்துகொண்டெய்
டாவதும்சோம்பலுடனேசூக்ஷமயில்லா
தமூடமுந்தேர்ந்தமாயநாடிடுவது

மிக்கவனல்பொழிகின்றகோபமுங்கொலையாதி
மேதவுமிகுத்திடுவது
மிருகயோனியும்தோகதியுமேதருவதும்
வெய்யதாமதகுணமென்பர்காண். 24

## ஞானத்தினியல்பு

பரவிடுங்கலைமுழுதுமாகமப்பகுதியும்
பலசமயநூல்களதுவும்

பார்த்துமெம்மேலுமேயாராய்ந்துமவைகளிற்
பசுபதியும்பாசமென்ன

வருகுமுப்பொருள்செய்தியுண்மையாம்
பொருளென்றுமனதுளேதான்தெளிந்து
வழுவாதுமுன்செய்தவினைகளுக்கீடாக
வந்தசிற்றறிவனைத்து

மருவாதறுத்துநற்பேரின்பமடைவிக்கு
வருகுபேரறிவுபெருகி
வளர்கின்றநெஞ்சுடைமைசிவஞான
மென்பாதில்மன்னுஞ்சாவுச்சியமென............ 25

## தருமவியல்பு

பொறுமையோடுகொடைகருணையினியமொழிகொள்வதும்
புண்ணியதீர்த்ததினயாத்திரை
போதலோடுமெனதையனாடுசிற்சபையாதி
பொங்குஞ்சிவத்தலத்தைகட

குறைவறத்தெரிசித்துவருவதுமன்னமது
கொடியபசியோர்க்கீவதுங்
கோதானபூதானகன்னிகாதானமுங்
கூருமனமோடருள்வது

சிறைமேவுபஷியைக்கூட்டிலடையாமலுஞ்
சிவவதைசெய்யாமலுந்
திருடாதும்பிறர்மனையைநயவாதிருப்பதுஞ்
சீர்மேவுதருமமென்பார். 26

## பொருளினியல்பு

அவமதிப்போட்டாவன்றிடும்பேர்தமக்கவரென்று
மவர்களென்றும்
அதிமேன்மைவருவதுதுர்க்குணரைநல்லோ
ரடுத்துமேற்பணிசெய்வதுந்

தவறானகீழ்சாதிமேல்சாதிசெய்வதுந்
தான்சொன்னசொற்சொல்வதுஞ்
சந்தர்ப்பமில்லாதுபோதைமொழிகூறினுஞ்
சகலருஞ்சரியென்பதும்

புவிமீதுதான்னியமனையாள்புருஸகலவை
போகங்களைப்பெறுவதும்
புண்ணியலோகாதிகளைமெம்மேலுமடைவதும்
பொருளினாலென்பர்பெரியோர். 30

## நூலுரைக்குமாசிரியரியல்பு

உலகெலாபுகழ்கின்றவுத்தமக்குலனோடு
முயர்வானநற்சில
முள்ளமதிலேகருணைவெள்ளப்பெருக்குமே
லுமைபாகனாதிபேரில்

நிலையாகவொருதெய்வபத்தியும்பொய்யிலாந்
நெறிதன்னிலேநிற்பதும்
நிகரிலாக்கலைகடேர்நகைவிபரிதமற்
நெஞ்சந்தெளிந்திடுவதும்

பலநாலுந்தருகின்றகட்டுரைகள்மொழிவதும்
பன்னுவண்ணமயுமாகிய
பாங்கானனூல்கள்இவ்வகைச்சுகுணமுற்றே
பகருமாசார்பனென்பார். 33

## உடிவே.....

உத்தமகுலத்தினிலுற்பவமாகியே
வோங்குநல்லறிவுபெற்று
வுள்ளமதிலேயைய்விபரிதமருகவே
வோதுபலகலைளயுணர்ந்து

நித்தியவ............போது
நெஞ்சினின்மெய்நிறுத்தி
நிக்குவத்தோடுபொருமைகருணையைக்கொண்டுமே
னிகரிலாச்சகுணமேலுப்

புத்தமுதமென்னவுத்பொருளினைச்சீ டனிட
புறிகொளுமட்டறிந்து
பொதிகாலைவல்லவன்யாவறேலவளையே
பொத்தகாசிரியனென்பார் 33

## மாயவாசிரியரியல்பு

மொழிகின்றசுகுணங்களொன்றெனு
மின்மையுமுதிரானவிழிவுகுணமும்
முடிபாபபொறுமையும்பேராசைகோபமு
மூள்கின்றவதிவஞ்சமும்

ஒழியாககளங்கமுமச்சமுங்கொண்டுமே
லொருவருக்கேனுங்கல்வி
யுள்ளபடிசொல்லாதுசந்தேகவிபரித
மோங்கவுபதேசிப்பதும்

வழுவறத்தான்றானேசொல்வதல்லான
வேண்டினவாய்தனைத்திறவாத்துமான
வித்தியகுணவூற்றுளோராகாதமாய
வாசிரியரென்பார் ........

நல்லொழுக்கங்களைத்தள்ளியே
குலயினனாகியுமறிவழிந்து
நளிதேர்யாகந்தேகவிபரிதமுட்கொண்டு
நற்கலைகடேராமலே. 34

## நூல்சொல்லவேண்டினோரியல்பு

தன்னுடையமகனுக்குமன்போடுமாசிரியர்
தனையனுக்கும்வாரிசூழ்
தரணிதனையோர்குடையினீழற்குளாக்கிடுந்
தலைவனிடமகனுக்குமேற்

பின்னுமுன்னுக்வொருயோசனைகள்செய்யாது
பெருகவேபொருளிதுவொன்
பிள்ளைக்குமப்புறம்சொன்னபடியேவலைப்
பிரியமாய்த்தான்பண்ணிடு

மன்னவர்க்குமினியபொருள்கோடிதந்தாலும்
அத்தனையுமறிவினுள்ளே
அசையாதுவைக்கும்பனு....நூல்
செ.....லதலாதுமென்பார்மேலையோர் 37

## பொய்

புகழைக்கெடுத்திடுமறிவைக்குறைத்திடும்
புவியிற்பழிப்பைதரும்
புண்ணியதன்னையேபோக்கிடும்
பாவங்கள்பொங்கிவளர்ப்பண்ணிடும்

நிகரற்றசெல்வத்தைநாசப்படுத்திடு
நெருந்தரித்திரத்தை
நீண்டுவளர்வாழ்....ாளழித்திடுந்தருமத்தை
நீக்கிடுநெஞ்சமதையே

பகவுற்றவாளாளறுத்திடும்வஞ்சமோடு
பயமாதிதன்னையருளும்
பாழானநரகினிற்குடியாகவைத்திடும்
பாவியாம்பொய்யென்பர்காண் 38

## கொலை

கொலையாளர்தங்களோடுகூடியேபழகினோர்
கொலையாளர்தந்தபொருளைக் –
கொண்டோர்கள்கொலைஞரைக்
கொண்டாடிமெச்சினோர்கொலையாளர்

தங்களுக்கேதில்மளவுவுதவினோர்கண்டகொலையர
சர்பால்செப்பாதொளித்தபேரும்
சினமிரியேதனதுயிர்மயக்க
வெண்ணினோர்தீயகொலையாளராவார்

பலநாளுநரகினிமிவர்களேநரகினிபட்டுவூடிப்
பன்றிநாய்கழுதையோனிப்
பற்றியேமனிதராய்வந்துபெருநோயை
படைத்துலவரென்பர்கண்டாய். 40

## பொறாமை

வேறுபகையின்றியேதன்னுளேயுச்சாக
மெம்மேலுமழிவித்திடும்
வெந்தணற்பட்டவுமிபோலேகனிந்தேனும்
வேகவைத்திடுஞ்சிந்தையைக்

கூறுபலகேடுகளையீயந்திடுமின்பமது
கொஞ்சமுந்தந்திடாது
குறையாதசெல்வமதுகுறைவிக்குமூதேவி
குடிகொள்ளுமிடமாக்கிடு

மாறிடாப்புகழ்தன்னைமாற்றிடும்பாவத்தை
மன்னிவித்திடுமொருவர்த
மதியூகயோகமதுகண்டேடுபொறாமையா
மாபாவியென்பர்கண்டாய் 41

## நூல்கற்குமியல்பு

தகுகாலமதுதனிற்குருவிடஞ்செல்வதுந்
தக்வழிபாடுசெய்து
தான்வெறுப்பில்லாமலவர்குணத்தோடுபழகிச்
சரியாய்க்குறிப்பின்னெய்தி

முகமலர்ந்திருவென்றுசொன்னபினிருந்து
மேன்மொழியென்னவேமொழிந்து
முரியாதவாசைகொடுகைகாலசைக்காமன
முடமறுத்தறிவினோங்கிப்

பகர்கின்றவாசிரியனுரையெலாமனமதிற்
பழுதறக்கொண்டுமறவர்ப்
பான்மையதுபெறுமதேநூல்கற்குமியல்பெனப்
பண்புறச்சொல்வர்பெரியோர். 42

## நூற்கேடற்குதவா

கன்னா.....யுண்டுவெறிகொண்டுதிரிகின்றவன்
கனநோயன்வெம்பிணக்கன்
கருதோணாவஞ்சகநெஞ்சினின்மிஞ்சினோன்
களவாளிசோம்பல்மிக்கோன்
எள்ளாதுபாவங்களேவைகளுசெய்யுவோ
னெப்போதுமேதுயிலுவோன்
எள்ளளவுதீக்ஷணப்புத்தியில்லாமத
னெளிதெனப்பொய்சொல்பவன்
கொள்ளாதவிரகமேற்கொண்டவன்பலகாலுங்
கொக்கறித்தேசிரிப்போன்
கோபமுறுவோன்முதலிவர்களனைவர்க்குநூல்
கூறொணாதென்பர்பெரியோர். 43

## நூல்தருமியல்பு

தன்னுடைகுலதெய்வமேத்தியேகாலமிடந்
தானறிந்தன்புகூர்ந்துச்
சாற்றிடும்பொருளைமுன்றனளகநிறுத்தியே
சற்றேனும்விரையாமலே
பன்னிடுபயனையேபலகாலமுத்திடுமாயப்
பகர்வித்துமறியாவிடிற்
பழுதானசினமுறகொடியசொல்லுரையாது
பண்பாகவன்றைவிட்டுப்

பின்னுளுரைத்து(மெய்)கொள்பவன்கொள்கையைப்
பெரிதுமேதானறிந்து
பிரியமாயருளாதனூல்சொல்லுமியல்பெனப்
பேசுவார்பெரியோர்களே 44

## முதலிடைகடைமாணாக்கரியல்பு

பாலொடுகூடுநீர்நீக்கியப்பாலினும்
பைந்தூவியன்னமது போல்
பரமனருள்பெருளெலாமையவிபரிதமாம்
பாவனைகளறவுணர்ந்து

ஆல்விரைபோற்பரவமறவாதுவொன்றுநாளுக்கு
முதன்மாணாக்கனாம்
ஆசிரியன்சொன்னவளவன்றியறியாதவ
னான்கிடைமாணாக்கனாம்

சாலவேகுருவிடல்கசடறபடியாது
சந்தேகவிபசீதமேதானடைந்
துள்ளதைமேமறந்திடுபவன்
சாற்றுகடைமாணாக்கனாம். 45

## ஈசுவதுரோஹம்

பரமகுருநிந்தையுஞ்சிவநிந்தையுமவர்
பத்தரிடநிந்தையதுவும்
பழமறையினிந்தையுமாகமபுராணமேற்
பண்ணிடுநிந்தையதுவும்

பொருலிலாததேவர்தஞ்சொத்தபகரித்தலும்
புண்ணியச்சத்திரத்தின்
பொருளினைத்திரட்டலுந்தருமந்தாவனமும்
பொங்கிடும்வாவிகுளமு

முரைசெயுங்கல்விமடமாபிவையழித்தலு
மொங்குமீசவர..காம
உணர்விலாதுதவர்கென்றென்று
மொழியாதுநரகமென்பார்இவைகளென்பதுசரி. 46

## கல்வி

திருடரால்திருட..தவாதுபங்காளிகள்
சேர்ந்துபங்கிடவொணாது
சினமிஞ்சியரசராலபகரித்திடவொணாச்
சீர்மையதுமேன்மையுளது

கருணையாலொருவருக்கீயினுங்குறையாது
காசினியைமகிழ்வித்திடும்
கருதிடுஞ்சொற்சுவைபொருட்சுவையினாலே
கருத்தைத்திதிப்பித்திடும்

பொருலிலாப்புகழைக்கொடுத்திடுந்தருமதவிடு
